# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
# (துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு)

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

## பொது முகாமையாளரின் செயலாளர் பதவி – ஜேஎம் 1-2, தரம் II (01 வெற்றிடம்)

**<u>வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கான தகைமைகள்:</u>**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டமொன்று

   **அத்துடன்**

   தொழில்நுட்பப் பயிற்சி பற்றிய மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் நடாத்தப்பட்ட அந்தரங்க செயலாளர்களுக்கான சான்றிதழ் கற்கைநெறி ஒன்று (06 மாதங்களுக்கு குறையாத காலப்பகுதி)

   **அல்லது**

2. இலங்கை பட்டயக் கூட்டாண்மைச் செயலாளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையைப் பூர்த்திசெய்திருத்தல்

   **அத்துடன்**

   செயலாளர் ஒருவராக ஐந்து (05) வருட வேலை அனுபவம்

**<u>வேறு தகைமைகள்</u>**

கணனி அறிவில் தேர்ச்சி பெற்றிருத்தல்

**<u>உள்வாரிப் பரீட்சார்த்திகள் (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3)</u>**

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளிவாரிப் பரீட்சார்த்திகள் தொடர்பான தகைமைகள்
2. உரிய துறையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத வகுதியின் தரம் (II) இல் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை
3. உரிய துறையில் பதவிநிலை உதவியாளர் (எம்ஏ-3) வகுதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை.

**வெளிவாரி மற்றும் உள்வாரிப் பரீட்சார்த்திகள் அனைவரும் பின்வரும் தகுதிபெறும் தகுதிவிதிகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்;**

1. நிமிடம் ஒன்றுக்கு 90 சொற்கள் சுருக்கெழுத்திலும் நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள் தட்டச்சிலும் தொழில் திறன் சோதனை ஒன்றில் சித்தியடைதல்.
2. க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி.

**சம்பள அளவுத்திட்டம்:** ஜேஎம் 1-2- 2016- ரூபா. (43,355- 10× 755-18× 1135- 71,335)

2024/01/01 ஆம் திகதியிலுள்ளவாறான சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ரூபா. 43,355/- ஆகவுள்ள (ஜேஎம் 1:2) தரம் II இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.
இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும்.

## இணை உத்தியோகத்தர் பதவி – எம்ஏ 3, தரம் III (03 வெற்றிடங்கள்)

**வாணிபப் பிரிவுகளுக்கான இணை உத்தியோகத்தர்**

**வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து இப்பதவிக்குரிய வியாபார முகாமைத்துவம்/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/ சந்தைப்படுத்தல்/ கடல்சார் பொறியியலில் பெற்றுக்கொண்ட இளமாணிப் பட்டமொன்று.

**சம்பள அளவுத்திட்டம்** எம்ஏ 3-2016– ரூபா-(32,200-10×445-11×660-10×730-5×750-54,960)

2024/01/01 ஆம் திகதியிலுள்ளவாறான சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ரூபா. 32,200/- ஆகவுள்ள எம்ஏ 3, தரம் III இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.
இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும்.

## முகாமைத்துவ உதவியாளர் பதவி - எம்ஏ 1-2, தரம் III (16 வெற்றிடங்கள்)

**வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கான தகைமைகள்**

- **கல்வித் தகைமைகள் :**

அ. க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்

I. சிங்களம்/ தமிழ்
II. கணிதம்

ஆ. க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சையை விட) சித்தியெய்தியிருத்தல்.

**வேறு தகைமை**

கணனி அறிவில் தேர்ச்சி

**<u>உள்வாரிப் பரீட்சார்த்திகள்</u>**

பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கும் ஆரம்ப மட்ட – திறமையான/ திறமையற்ற வகுதிகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுண்டு.

**<u>கல்வித் தகைமை:</u>**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களுடன் சேர்த்து நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்
சிங்களம்/ தமிழ்
கணிதம்

**<u>வேறு:</u>**
மேற்போந்த ஊழியர் வகுதியின் கீழ் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்.

**குறிப்பு:-** நிரந்தரப் பதவியொன்றுக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் உள்ள ஏதேனும் சேவைக் காலப்பகுதியை அல்லது ஏதேனும் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கு முற்தேவைப்பாடு ஒன்றான பயிற்சியின் கீழ் பூர்த்திசெய்யப்பட வேண்டிய ஏதேனும் சேவைக் காலப்பகுதியை, மேலே குறிப்பிடப்பட்டவாறான தகைமைக்கு தேவைப்படுத்தப்பட்ட ஐந்து வருட சேவைக்குள் கணக்கிடலாகாது. அமைய / தற்காலிக அடிப்படையிலான எந்தவொரு சேவைக் காலப்பகுதியையுங்கூட இந்நோக்கத்திற்காக கணக்கிடலாகாது.

## முகாமைத்துவ உதவியாளர் பதவி (கலத்துறை மேடை)- எம்ஏ 1-2, தரம் III (1 வெற்றிடம்)

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான வெளிவாரி மற்றும் உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு ஏற்புடைய தகைமைகள் மற்றும் அனுபவம் என்பனவும் இப்பதவிக்கு ஏற்புடையதாகும் என்பதுடன் மேலும் பின்வரும் தகைமைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அ. குறைந்தது ஒரு வருட அனுபவத்துடன் செல்லுபடியாகக்கூடிய சுங்க இல்ல முகவர் (CHA) அனுமதிச்சீட்டு ஒன்றைக் கொண்டுள்ளவராக இருத்தல்.

ஆ. செல்லுபடியாகக்கூடிய மோட்டார் சைக்கிள் செலுத்தல் அனுமதிப் பத்திரம் ஒன்றைக் கொண்டுள்ளவராக இருத்தல்.

இ. இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA) அனுமதிச்சீட்டு (A அல்லது B தரம்) ஒன்றைக் கொண்டிருத்தலானது மேலதிக தகைமையாக அமையும்.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்ஏ 1-2- 2016- ரூபா. (27,910- 10× 300-7× 350- 12×600-12×710-49,080)

2024/01/01 ஆம் திகதியிலுள்ளவாறான சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ரூபா. 27,910/- ஆகவுள்ள (எம்ஏ 1:2) வகுதியின் தரம் III இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.
இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும்.

## சாரதிப் பதவி – பிஎல் 3, தரம் III (01 வெற்றிடம்)

**<u>வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கான தகைமைகள்</u>**

**<u>கல்வித் தகைமை:-</u>**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியெய்தியிருத்தல்

அத்துடன்

**<u>தொழில் தகைமை:-</u>**

கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான செல்லுபடியாகக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்றையும் கனரக வாகனங்களைச் செலுத்துவதில் பிரபலமான தாபனமொன்றில் குறைந்தது ஐந்து (05) வருட அனுவத்தையும் கொண்டிருத்தல்.

**<u>உள்வாரிப் பரீட்சார்த்திகள்</u>**

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தையும் (எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்) அத்துடன் அந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் வாகனம் செலுத்துவதில் குறைந்தது மூன்று (03) வருட அனுவத்தையும் கொண்டிருத்தல்

அத்துடன்

ஆரம்ப திறைமையற்ற (பிஎல்1) வகுதியிலுள்ள பதவியொன்றில் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**: பிஎல் 3- 2016- ரூபா. (26,290- 10× 270-10× 300- 10×330-12×350-39,490)

2024/01/01 ஆம் திகதியிலுள்ளவாறான சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ரூபா. 26,290/- ஆகவுள்ள (பிஎல் 3) வகுதியின் தரம் III இன் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.

இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் செலுத்தப்படும்.

**<u>சகல பதவிகளுக்குமான பொது நிபந்தனைகள்</u>**

**வயதெல்லை** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

**தகுதிகாண் காலப்பகுதி** வெளிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு 03 வருடங்கள் உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு 01 வருடம்

**இதர நன்மைகள்**

1. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு
2. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு
3. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு
4. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளை காசாக்குதல்
5. ஏற்புடையதான வருடாந்த மிகையூதியம்
6. சலுகை நியதிகளின் பேரில் அலுவலர் குழாத்துக் கடன்களும் வீடமைப்புக் கடன்களும்
7. சலுகை நியதிகளின் பேரில் வாகனக் கடன்கள்

**பொது அறிவுறுத்தல்கள்**

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் 2024.01.15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் விண்ணபத்திலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்**
**இல: 27, MICH கட்டடம்**
**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**
**கொழும்பு 01**

**மேலதிக விபரங்களுக்கு - (+94) 011 2 497 800, விரிவு 258/251 – மனித வளத் திணைக்களம்**

திகதி : 02.01.2024